# இயல் 6.2 - இயற்கணிதம்

## பயிற்சி எண் :: 6.2.1.2.A

### வினா எண் :: 1

**பாபு அவன் தங்கை கவிதாவை விட 4 வயது பெரியவன். மாறிகளை உபயோகித்து இதை ஒரு சமன்பாட்டில் எழுதுக.**

---

பாபுவின் வயதை $p$ எனும் மாறியாகவும், கவிதாவின் வயதை $q$ எனும் மாறியாகக் கொள்க.
பாபுவின் வயது அவன் தங்கையின் வயதைவிட 4 வயது அதிகம்.

$$\therefore \overbrace{\text{பாபுவின் வயது}}^{p} = \overbrace{\text{கவிதாவின் வயது}}^{q} + 4$$

$$p = q + 4$$

### விடை

$$\boxed{p = q + 4}$$


All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.